பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.லிட்.

மலர்: 15] சென்னை: சித்திரை 15 (27—4—58) சனி ★ வெளியூர்: சித்திரை 16 (28—4—58) ஞாயிறு [இதழ்: 263

137 வகைகளில் 4800 கோடி எலிகள்

ஆண்டுக்கு ஒரு கோடி டன் தானியங்களை அழிக்கின்றன!

"ஒவ்வொரு ஆண்டும் இந்த நாட்டில் ஒரு கோடி டன் உணவுத்தானியங்கள் எலிகளால் அழிக்கப்பட்டு வருகின்றன" என்று டாக்டர் ஸ்ரீவத்சவா கூறியிருக்கிறார்; மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"இந்தியாவில் இப்போது 4800 கோடி எலிகள் இருக்கின்றன; அவைகளில் மொத்தம் 137 வகைகள் இருக்கின்றன."

மத்தியில் பல கட்சி ஆட்சி?

இப்போதைக்கு இயலாத ஒன்று

ஜெயப்பிரகாஷ் நாராயணனின் யோசனைபற்றி அண்ணா கருத்தறிவிப்பு

நியூஹேவன், ஏப். 25—

"காங்கிரசுக்கும்--எதிர்க் கட்சிகளுக்குமிடையேயுள்ள வேற்றுமைகளைவிட, எதிர்க் கட்சிகளுக்குள்ளேயே உள்ள கருத்து வேற்றுமைகள் அதிகம்; ஆனால், கருத்து வேற்றுமை இல்லாமல் சனநாயகம் இருக்க முடியாது.

"மாநில மட்டத்திலும்' கட்சி வேற்றுமையற்ற அல்லது அனைத்துக் கட்சிச் சார்புடைய அரசு அமைப்பது கடினமே; எடுத்துக்காட்டாக, தமிழகத்தில் காங்கிரசும்--தி. மு. கழகமும் சேர்ந்து கூட்டாட்சி ஏற்படுத்திக் கொள்வதாக வைத்துக்கொள்வோம்; அதன் பின்னர் காங்கிரசுக் கட்சியோ' தி. மு. கழகமோ மக்களிடம் என்ன சொல்லி வாக்குக் கேட்க முடியும்? எந்த அடிப்படையில் மக்களுடைய ஆதரவைக் கோர முடியும்?"

"ஒரு குறிப்பிட்ட வேலைத் திட்டத்தை வகுத்து, அதன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறோம்; அந்தத் திட்டங்களைக் கைவிட முடியாது; ஆனால், மாநில மட்டத்தில் எல்லா எதிர்க் கட்சியினையும் சேர்த்துக் கொண்டு அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கலாம்"

என்று, தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், இங்கு ஒரு நிருபருக்கு அளித்த பேட்டியின்போது கருத்தறிவித்தார்.

"இதனைச் செய்ய ஜெயப்பிரகாஷ் நாராயணன் போன்றவர்களால்தான் இயலும்; இதற்கு திரு ஜெயப்பிரகாஷ் நாராயணன் இன்னும் நேரடியாக அரசியலில் இறங்க வேண்டும்" என்றும் அண்ணா கூறினார்.

திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் கூறும் அரசியல் கட்சிகளின் தேசீய மாநாட்டு யோசனையை அண்ணா வரவேற்றார்; ஆனால், கட்சி வேற்றுமையற்ற அரசியலை ஆதரிக்கவில்லை.

"கட்சி சார்பற்ற அரசியலினால், மத்திய அரசில் ஒரு கொள்கையற்ற குழப்பமான நிலைமை ஏற்படும்! அல்லது சர்வாதிகார நாடுகளில் உள்ளது போலாகி விடும்"

என்று அண்ணா அவர்கள் கருத்தறிவித்தார்கள்.

முன்பு ஜான் மத்தாய், சர். ஆர். கே. சண்முகம் செட்டியார், சி. டி. தேஷ்முக் போன்ற கட்சிசார்பற்றவர்களை நேரு தமது அமைச்சரவையில் சேர்த்துக் கொண்ட போதிலும் அவர்கள் தாமாக விலகவோ, வெளியேற்றப்படவோ நேர்ந்ததை அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டினார்.

"ஒரே மாதிரியான கொள்கை கொண்ட கட்சிகள் ஒன்றுபட வேண்டும்; என்ற எஸ். கே. பட்டீலின் யோசனையிலும் சில சிக்கல்கள் இருக்கின்றன" என்றார் அண்ணா.

"காங்கிரசு அமைக்கும் கூட்டரசில், சுதந்தரக் கட்சியைச் சேர்த்துகொண்டால் சோஷலிஸ்டுகள் அதில் சேரமாட்டார்கள்; சோஷலிஸ்டுகளைச் சேர்த்துக்கொண்டால் கம்யூனிஸ்டுகள் ஒதுங்கி விடுவார்கள்; எனவே, மத்தியில் அனைத்துக் கட்சிக் கூட்டரசு ஏற்படுவது என்பது இப்போதைக்கு இயலாத ஒன்று"

என்றும் அண்ணா அவர்கள் தெளிவுபட விளக்கினார்கள்.

அமெரிக்கத் தலைநகரில் அறிஞர் அண்ணா

வாஷிங்டன், ஏப். 27 -

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், நேற்று அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டன் வந்தடைந்தார்.

வாஷிங்டன் விமான நிலையத்தில் அமெரிக்க அரசு அதிகாரிகளும், வாஷிங்டன்வாழ் தமிழ் மக்களும் கூடி நின்று வரவேற்றனர்.

வாஷிங்டனில் மூன்று நாட்கள தங்கும் அண்ணா அவர்கள், குடியரசுத் தலைவர் ஜான்சனையும் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட விருக்கும் ராபர்ட் கென்னடி, மக்கார்த்தி ஆகியோரையும் சந்திக்கத் திட்டமிட்டிருக்கிறார்.

டில்லி யோசனை

தமிழகம் ஏற்கவில்லை

புதுடில்லி, ஏப் 26—

"எஞ்சினீயர்களுக்காக, 'அனைத்திந்திய சர்வீசு' ஒன்றை அமைக்கலாம் என மத்திய அரசு கூறிய யோசனையை, தமிழக அரசு ஒப்புக்கொள்ளவில்லை"

என்று, மக்களவையில், உள்துறை துணையமைச்சர் கூறினார்.

அறிஞர் அண்ணாவைப்பற்றி மாணவர் மதிப்பீடு

நியூ ஹேவன், ஏப். 26—

டிமோத்தி டுவைத் கல்லூரி மாணவர்கள் தமது கல்லூரிச் செய்தி ஏடான 'டவுன் கிரையர்' ஏப்ரல் 22-ம் நாள் இதழில் தமிழக முதலமைச்சர் வருகைக்குச் சிறப்பிடம் அளித்துள்ளனர்.

"'நேரு காலத்திற்குப் பின்பு, இந்தியாவில் தோன்றியுள்ள ஒருசில தலைசிறந்த தலைவர்களில் ஒருவர்' என்று தமிழக முதல்வரை இந்தச் சிறப்பிதழ் பாராட்டியுள்ளது.

"தமிழகத்தின் 3½ கோடி மக்களுக்குப் பொறுப்புள்ள தலைமையும் சிறந்த ஆட்சியும்" அவர் வழங்கிவருவதாக அது குறிப்பிடுகிறது.

"அண்ணாதுரையையும், அவரது குழுவினரையும் டிமோத்தி டுவைட் கல்லூரி வரவேற்கிறது; அவர்கள் எங்களுடன் தங்கும் காலம் மகிழ்ச்சியளிப்பதாக அமையும் என நம்புகிறது" என்று கல்லூரி இதழ் நல்வரவு கூறுகிறது.

தமிழக வரலாற்றுச் சுருக்கமும் இந்த இதழில் இடம் பெற்றுள்ளது.

இந்திய அரசியல்--மொழிப் பிரச்சினைகள்பற்றி அண்ணா

நியூஹேவன், ஏப். 26--

மாணவர்களையோ, செய்தியாளர்களையோ சந்திக்கும்போதெல்லாம் கேள்வி-பதில் முறையைக் கடைபிடிப்பதையே அண்ணா அவர்கள், ஒரு வழக்கமாக்கிக்கொண்டுள்ளார்; சில கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்களின் சுருக்கம் வருமாறு:—

மொழிப் பிரச்சினை

"நாடு, மற்ற அவசர அவசியமான பிரச்சினைகளைத் தீர்க்க வாய்ப்பளிப்பதன் பொருட்டு, ஒரு 25 ஆண்டுகளுக்கு இந்தியா மொழிப் பிரச்சினைக்கு 'விடுமுறை' கொடுப்பதைத் திராவிட முன்னேற்றக் கழகம் விரும்பும்.

"இந்தியாவின் இணைப்பு மொழியாக ஆங்கிலம்தான்—இந்தி அல்ல—இருக்கவேண்டும்."

இந்தியாவில் காங்கிரசுக் கட்சியின் பங்கு

"வருங்காலத்தில், அண்மையில் காங்கிரசுக் கட்சிக்கு ஈடாக நாடு முழுமைக்குமான ஒரு மாற்றுக் கட்சி ஏற்படுமென நான் கருதவில்லை; வேறு எந்தக் கட்சிக்கும் நாடு முழுவதிலும் ஒரு ஒன்றுபட்ட பலம் இருக்கமுடியாது.

"வருங்காலத்தில், அரசியல் நோக்கங்களுக்காக மாநிலக் கட்சிகள ஒன்று சேர்ந்து ஒரு கூட்டு அமைப்பு நிறுவுவது நடக்கலாம் என எதிர்பார்க்கிறேன்; ஆனால், ஓர் அனைத்திந்தியக் கட்சியினை மையக் கருவாக ஆகக்கூடிய அளவுக்கு மாநிலக் கட்சிகள் எதற்கும் போதிய பலமிருப்பதாக நான் கருதவில்லை."

கம்யூனிசப் புதிர்!

"இந்தியாவிலுள்ள சீனச் சார்பு இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும்—இரஷ்யச் சார்பு வலதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் இடையேயுள்ள வேற்றுமைகள் என்ன?" என்ற கேள்விக்கு அவர் அளித்த பதிலாவது:—

"நான் எத்தனையோ புதிர்களுக்கு விடை கண்டிருக்கிறேன்; ஆனால், இதைக் கண்டுபிடிப்பது எனக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது!"

இவ்வாறு அண்ணா அவர்கள் கூறியதும், அனைவரும் சிரித்துவிட்டனர்!

சில இந்தியத் தலைவர்கள் தெரிவித்துள்ள 'கட்சி சாராத' அரசாங்கம் அமைக்கும் கருத்துபற்றிக் கேட்டதற்கு, அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"சில கம்யூனிஸ்டு நாடுகளில் இன்று நிலவும் 'கட்சியில்லாத' ஆட்சிக் கருத்துக்குத்தான் இது வழி செய்யும்; இந்திய சனநாயகத்துக்கு இது ஆபத்தானதாகும்."

மாநிலக் கட்சிகள் பற்றி அண்ணா அவர்கள் கருத்தறிவித்ததாவது:—

"குறிப்பிட்ட சில கட்சிகள் சார்பில் நின்று மாநில வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்வாதிகள், தமது கட்சிகளுக்கு முழுக்குப் போட்டுவிட்டு, நாடாளுமன்றத்துக்குக் 'கட்சி சார்பற்றவர்களாக'ப் போகக்கூடாது; இது, அவர்கள் போட்டியிட்ட தொகுதிகளுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்வதாகும்."

ஸ்டர்லிங் நூலகத்தில் அறிஞர் அண்ணா

புதன்கிழமை தமிழகத் தலைவர் அண்ணா யேல் பல்கலைக்கழக வளைவுகளுள் பார்வையிட்ட இடங்களில் ஒன்று—ஸ்டர்லிங் நினைவு நூலகம்.

பல்கலைக் கழகத்தின் தலைமை நூலகம் இது; 50-இலட்சம் நூல்களுக்கு மேல் இங்கு உண்டு.

முன்னூறு ஆண்டுகளுக்குமுன்பு இங்கு கல்லூரி தொடங்கிய போது பத்தே நூல்கள்தாம் இருந்தன.

கல்வி நிலைய வளைவுக்குள் மற்றும் பல நூலகங்களும் உள்ளன; இவற்றிற்கு ஓர் உறுதுணையாக விளங்குகிறது, தலைமை நூலகம்.

'சிவசேனை' பற்றி மாராட்டிர அரசு

'பிடி' கொடுக்காத வகையில் கருத்து

புதுடில்லி, ஏப். 26—

"'சிவசேனை இயக்க'த்துக்கு,உள்ளூர் வர்த்தக வட்டாரங்கள் உதவி அளித்து வருகின்றன' என்ற சந்தேகம் இருந்துவருகிறது—என, மத்திய அரசுக்கு மாராட்டிர அரசு தெரிவித்திருக்கிறது; ஆனால், 'இந்தப் புகாரை மெய்ப்பிப்பதற்கான சான்று எதுவும் கிடைக்கவில்லை' என்றும் அம்மாநில அரசு கூறியிருக்கிறது."

இவ்வாறு மக்களவையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் உள்துறைத் துணையமைச்சர் வி. சி. சுக்லா தெரிவித்துள்ளார்.

இரட்டை ஆட்சி ஏன்?

நாடாளுமன்றத்தில் கமலநாதன்கேள்வி

புதுடில்லி, ஏப். 26—

"மாநில அளவில் பொதுப் பணித் துறை இயங்கும் போது, மத்திய அரசில் பொதுப் பணித் துறை செயல்படுவதேன்?"

என்று பொதுப் பணித் துறை—வீட்டு வசதி மானியத்தின்மீது நாடாளுமன்றத்தில் விவாதம் நடந்தபோது, கழக உறுப்பினர் கமலநாதன் கேட்டார்.

"இந்த இரட்டை ஆட்சி எதற்காக?" என்று கேட்ட அவர், 'மத்தியஅரசின் பொதுப்பணி துறையை எடுத்துவிடவேண்டும்' என்றும் வற்புறுத்தினார்.

கண், கால் இழந்தவர்களுக்ுப் பஸ்களில் சலுகை

சென்னை, ஏப் 25—

சென்னை நகரத்தில் அரசுப் பேருந்துகளில் சிகிச்சைக்காகச் செல்லும் பார்வை இழந்தவர்களுக்கும் உடல் ஊனமடைந்தவர்களுக்கும் முழுக் கட்டணச் சலுகை கிடைக்கும்.

மாநிலப் போக்குவரத்துத் துறை பொதுமக்கள் தொடர்பு அதிகாரி இதுபற்றித் தெரிவிப்பதாவது:—

"மூன்று ஆண்டுக் காலத்திற்குள் இரண்டு கண்களை இழந்தவர்களும், முடமானவர்களும் இந்தச் சலுகை பெறத் தகுதியுள்ளவர்கள்; தங்களிடம் மருத்துவச் சான்று வைத்திருக்கவேண்டும். சிகிச்சை பெற்றுக்கொண்டிருப்பதைக் குறிப்பிடும் மருத்துவச் சீட்டு ஒன்றையோ மருத்துவரின் சான்றிதழோ வைத்திருக்கவேண்டும். இந்தச் சலுகைகள் உடனடியாக அளிக்கப்படும், ஆனல் நகரில் ஓடும் அரசினர் பஸ்களில் மட்டும் சிகிச்சை காலத்திற்கு இச்சலுகை கிடைக்கும்."

பின்வரும் நபர்களுக்குச் சலுகை கிடைக்கும்:—

இரு கண்களையும் இழந்துவிட்ட நபர்; அவருடன் செல்லும் நபருக்கு முழுக் கட்டணம் வசூலிக்கப்படும்.

ஒரு கையோ அல்லது இரண்டு கைகளையோ இழந்துவிட்டவர்கள்; ஒரு கால் அல்லது இரண்டு கால்களையும் இழந்துவிட்டவர்கள்.

குருடர் அல்லது கை இழந்தவர் தனியாகப் பிரயாணம் செய்தால் இச்சலுகை கிடைக்காது.

இலங்கை -- பர்மா அகதிகட்கு மறுவாழ்வு

வ. ஆ. மாவட்டத்தில் புதிய குடியிருப்புக்கள்

வேலூர், ஏப். 26—

"இலங்கையிலிருந்து வெளியேறி வருபவர்களுக்கு, பூசிமலைக்குப் பத்துக்கு அருகில் காலனி ஏற்படுத்தவும், விவசாய வசதிகள் செய்யவும், ரூ. 50 இலட்சம் செலவாகக்கூடிய ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு அரசினர் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது"

என்று வடாற்காடு மாவட்ட கலெக்டர் பெல்லியப்பா அறிவித்தார்.

பர்மாவிலிருந்து வெளியேறி வர்தவர்களுக்காக வேலூருக்கு அருகில் வசந்தபுரத்தில் 39 வீடுகள் கொண்ட காலனி ஏற்படுத்துவதற்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில்தான் கலெக்டர் இதனைத் தெரிவித்தார்.

"பர்மாவிலிருந்து வெளியேறி வந்துள்ள 200 குடும்பங்களுக்கு இந்த மாவட்டத்தில் ரூ. 6.5 இலட்சம் செலவில் காலனிகள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது" என்றும் அவர் சொன்னார்.

வரலாறு பதில் சொல்லும்!

முத்து

"இந்திக்கு முதலிடம் அளிப்பது நமது அடிமைத்தனத்தை வேறொரு வகையில் நிலைநாட்டுவதற்குச் சமம்! ஆங்கிலத்தின் இடத்தை இந்தி பெற்றால், தென்னகத்தாராகிய நமக்குப் பெருத்த தீங்குண்டாகும்! தாயமொழி தவிர்த்து வேற்று மொழி ஒன்றைப் புதிதாகப் படித்து அதன்வழி கருத்தறிவிக்க நாம் கட்டாயப் படுத்தப்பட்டால், நம் முன்னேற்றத்தின் உண்மையான தடை அதுதான்! ஆகவே, இந்தியைப் பொது மொழியாக்குவது பற்றி விழிப்பாக இருக்க வேண்டுமென்று நான் அரசியல்வாதிகளை எச்சரிக்கிறேன்!"

1923-ல் முழுக்க முழுக்க இந்தியில் நடத்தப்பட்ட கயா காங்கிரசு மாநாட்டுக்குச் சென்று திரும்பிய பிறகு, மாநாட்டுச் செயலாளர்—ஆந்திர காங்கிரசுக்காரர் இரத்தின கோபாலகிருஷ்ண இராமய்யா, 45 ஆண்டுகளுக்கு முன்னலே வெளியிட்ட அறிக்கையின் பகுதி இது.

"இந்திதான் தேசிய மொழி என்று சிலரும், உருதுதான் தேசிய மொழி என்று வேறு சிலரும் கனவு காண்கிறார்கள். புனிதமற்ற இந்தக் கனவு என்றும் கனவாகவே இருக்கும் — நனவாகாது!"

—இந்தியைத் தேசிய மொழியாக்கத் துடித்த வெறியர்களைக் கண்டித்துக் காந்தியடிகள் வெளியிட்ட அறிக்கை.

"இந்தி—உருது மொழிகளின் அறிவும் நாகரி - உருது எழுத்துக்களும் சேர்ந்த கலவைதான் ஆட்சி மொழிக்கு நான் அளித்த விளக்கம். இதைச் சம்மேளனம் ஏற்காமையால், வருந்தி, இதன் தலைமைப் பதவியிலிருந்து விலகிக்கொள்ளுகிறேன்."

—இந்தி சாகித்திய சம்மேளனத்தின் இந்தி வெறிப் போக்கைக் கண்டு மனம் வெதும்பி விலகிக்கொண்டபோது, புருஷோத்தம் தாஸ் தாண்டன் என்ற இந்தி வெறியருக்குக் காந்தியடிகள் எழுதிய கடிதம்.

"நாட்டு நன்மை கருதிக் காங்கிரசு உழைத்து உருவாக்கிய இந்துஸ்தானி மொழி உணர்வை அழித்து இந்தியைத் தேசிய மொழியாக்கிட காங்கிரசின் பெருந்தலைவர்கள் என்று சொல்லப்படுகிற சிலர் முனைந்திருப்பது வேதனையாக இருக்கிறது! அது, அவமானம் நிறைந்த ஓர் வஞ்சக நடவடிக்கை!"

—விடுதலை வீரர் தாதாபாய் நௌரோஜியின் பேத்தி திருமதி பெரின் பென், மனம் கொதித்துக் காந்தியாருக்கு எழுதிய கடிதப் பகுதி.

கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக்காலமாக இந்தி வெறியர்கள் எவ்வளவு முனைப்புடன் இருந்து மற்றவர்மீது இந்தியைத் திணித்திட முயன்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்டவே இந்த மேற்கோள்கள்.

காந்தியாரைப் பலி கொண்ட சக்தியில் பெரும் பங்கு, இந்தி மொழி வெறிக்கே உண்டு!

சிதைந்துகொண்டிருக்கின்ற காங்கிரசு, விரைவில் இனம் தெரியாமல் அழிய இருப்பதற்கும் இந்தி மொழி வெறியுணர்வே மூலகாரணம்!

"மொழி உயிரோடிருக்கும் வரையில்தான் சமூகம் உயிரோடு இருக்கும்" என்பது செக் நாட்டுப் பழமொழி!

அதனால்தான், 'ஓர் இனத்தை அழித்திட வேண்டுமா? அப்படியானல், இந்த இனத்தின் மொழியை அழித்துவிடு' என்றார் கிப்பன்ஸ்.

இந்தியை நேரடியாகத் திணிக்க முயன்று முயன்று தோல்வியுற்ற வெறியர்கள், புதுப் புதுப் புதுப் புலங்களைத் தேர்ந்தெடுத்து, பொல்லாத முறைகளில் எல்லாம் இந்தியைப் புகுத்திக் கொண்டிருக்கிறார்கள்!

'இந்தி மொழித் திணிப்பினால், இந்தியா பிளவுபடும் ஆபத்து உண்டா?' என்று நியூ ஹேவனில் செய்தியாளர் கேட்ட கேள்விக்கு, 'அப்படிப்பட்ட நிலை ஏற்படும் என்று நான் கருதவில்லை' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது, அவரது பெருந்தன்மையைக் காட்டுவது! ஆனல், இந்தி வெறியர்கள் அதற்கேற்பப் பண்புடன் நடந்துகொள்வார்களா என்பது ஐயப்பாடே!

'சிறுபான்மையினரைப் பாதுகாப்பதில் எங்களைப் போல் இல்லை' என்று உலக அரங்கங்களில் பீத்திக்கொண்டே—'பல்வேறு மொழி--இன--கலாச்சாரங்களின் தனித்தன்மை பாதுகாக்கப்படும்' என்று சட்டத்தில் எழுதிவைத்து விட்டே—இந்த மொழி--இன--கலாசார அழிப்பில் இந்தி வெறியர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்!

தமிழகத்தில் முழுமூச்சுடன் இந்தித் திணிப்பு எதிர்க்கப்படுகிறது என்றதும், மத்திய அரசின் மானியத்தைப் பெறும் தட்சிண பாரத இந்தி பிரசார சபை, தன்னுடைய கூலிக்காரப் பிரசாரகர்கள் மூலம் ஆங்காங்கே இலவசப் பள்ளிகளைத் திறக்கத் தொடங்கி இருக்கிறது!

இந்தி மொழித் திணிப்புக்காக இவர்களுக்கு எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது--என்னென்ன சலுகைகள் எல்லாம் தரப்படுகின்றன என்பது, அவர்கள், இலவசப் பள்ளிகளைத் திறக்கும்வேகத்திலிருந்தே தெரிகிறது! ஆனல், அந்தப் பள்ளிகளில் 'போணி' ஆகவில்லை என்பதாலே, பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளியிட்டிருக்கிறார்கள்!

இந்தக் கங்காணிகளைப் பார்க்கிறபொழுது,

'இந்தியை எதிர்ப்பவன் தமிழனாகச் சாகிறான்—
இந்தியை ஏற்பவன் தரகனாக வாழ்கிறான்'

என்று யாரோ ஒருவர் சொன்னது, நினைவுக்கு வருகிறது.

வருகிற கல்வி ஆண்டிலிருந்து 6-வது வகுப்பு முதல் சமூகப் பாடங்களை இந்தியிலேயே கற்பிக்கும்படி மத்திய அரசுப் பள்ளிகளுக்கு ஆணை வந்திருக்கிறதாம்!

"விஞ்ஞானம், கணக்கு போன்ற பாடங்கள் புதிய ஆணைப்படி ஆங்கிலத்தில் கற்பிக்கப்படும் என்றாலும், இந்தியே பயிற்று மொழி ஆகும் சாத்தியமும இருக்கிறது" என்கிறார் ஓர் அதிகாரி!

இன்னும் என்ன வேண்டும்?

காக்க வேண்டிய நேரத்தில் தாக்கிக் கொண்டிருந்துவிட்டு காட்டிக் கொடுத்த காங்கிரசுக் கயவர்கள், இன்னும் மொழிப் பிரச்சினை பற்றி வீண் பேச்சு பேசிக்கொண்டிருக்கிறார்கள்!

திரு. பக்தவத்சலனாருக்கு மொழிப் பிரச்சினை பற்றிப் பேசிட உரிமை இருக்கலாம்; ஆனல் தகுதி உண்டோ!

இன்னொரு அறிவாளி---தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம்! இந்தி, குடியரசுத் தலைவர் போலவாம்! ஆங்கிலம் தலைமை அமைச்சர் போலவாம்! போயும் போயும் இலக்குமிபுரம் இளைஞர் சங்கத்தில் இப்படி உளறிக் கொட்டினார் சுப்பிரமணியம்;

'பேருக்குத்தான் இந்தியே தவிர,
செய்வதெல்லாம் ஆங்கிலம்தான்'

என்று நாம் நம்ப வேண்டுமாம்!

இந்தத் தரகரின் பேச்சை, நாடு கேட்கும் காலம் போய்விட்டது!

'யாருடைய அதிகார வரம்பு என்ன?' என்பதைத் தெரியாதவர்களா இலக்குமிபுரத்தார்!

ஏற்கனவே அஞ்சல் துறையில் புகுந்து விளையாடிக்கொண்டிருக்கின்ற இந்திக்கு, இன்னம் புதுப் புதுப் புனைவுகளைச் செய்கிறார்கள்!

'ஏடா மூடா! படிடா இந்தி!' என்று கட்டாயப் படுத்துவதுபோல், மத்திய அரசின் காரியங்கள் ஒவ்வொன்றும் அமைந்துவருகின்றன!

"ஏய்! இந்தி எதிர்ப்புச் சிங்கங்களே! உங்கள் பையிலே இருக்கிற காசுகளுக்கு எப்படி எதிர்ப்புத் தெரிவிக்கப் போகிறீர்கள்?"

என்பதுபோல், உலோகக் காசுகளில் எல்லாம் 'இந்தியா' என்ற ஆங்கிலச் சொல் தவிர, மற்ற அனைத்தும் இந்தி மயமாக உள்ளன!

'இந்தியிலே எழுதப் படிக்கத் தெரிந்தவர்தான் இனி ரிசர்வ் பாங்கிக் கவர்னராக வரலாம்; தெரிந்து கொள்' என்று நமக்குச் சுட்டிக் காட்டுவதுபோல், புதிய ரூபாய் நோட்டுகளில் இந்திக் கையெழுத்து இனி இருக்குமாம்! இதை, 'வெறும் அறிவிப்பு' என்பதுபோலச் சந்தடியின்றி வெளியிட்டாலும், 'தமிழர் உள்ளத் தீயை மூட்டிவிடும் பொறி' என்பது நமக்கு நன்றாகப் புரிகிறது!

இங்கே இருக்கிற சூடு சுரணையற்ற காங்கிரசுக்காரர்கள், இன்னமும் நேருவின் உறுதி பற்றியும், மத்திய அரசில் இரு மொழி பயன்படுத்தல் பற்றியும் பேசி, ஊரை ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள்!

ஆனல், ஒன்று மட்டும் நிச்சயம்; அறிஞர் அண்ணா அவர்களின் வாதங்களை உலகம்

(4-ம் பக்கம் பார்க்க)

அரசினர் அச்சிடும் பாட நூல்கள்

ஜூன் திங்கள் இறுதிக்குள் கிடைக்க ஏற்பாடு

வேலூர், ஏப். 28—

"அரசாங்கத்தில் பள்ளிகளுக்காகத் தயாரிக்கப்படும் பாட நூல்கள் அனைத்தும் ஜூன் திங்கள் இறுதிக்குள் கிடைப்பதற்கு, அந்தந்தத் துறையைச் சார்ந்தவர்கள், உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனத் தமிழக அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது"

என்று தமிழகக் கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வில் வேறு ஓரிடத்தில் நடைபெற்றது.

மிகச் சிறந்த சந்திப்பு

அண்ணா அவர்களின் வருகையால், பில்லிமன் கல்லூரியின் இளம் மாணவர்கள் பெரும் மகிழ்ச்சியடைந்திருப்பதாகத் தோன்றியது; 'இதுவரையில் நடைபெற்ற இதுபோன்ற சந்திப்புக்கள் அனைத்திலும் மிகச் சிறந்தது இது' என்று ஒரு மாணவர் உற்சாகத்தோடு கூறினார்.

"உங்கள் உணவை நீங்களே எடுத்துச் செல்லுங்கள்" என்ற தலைப்பில், இந்தக் கல்லூரி மாணவர்கள், தமக்குப் பிடித்தமான தலைவர்களுக்கு அளிக்கும் பகல் விருந்து வரிசையில் இது 34-வது ஆகும்.

அண்ணாவிடம் அமெரிக்கமாணவர்கள் கேட்ட கேள்விகள், இந்தியாவின்பால் அவர்களுக்குள்ள பரிவையும் ஆர்வத்தையும் புலப்படுத்தின; பலப் பல துறைகள் பற்றி அவர்கள் கேள்விகள் கேட்டனர்; இந்தியாவின் உணவுப் பிரச்சினை—குடும்பக் கட்டுப்பாடு—பாதுகாப்புப் போன்ற பொதுத் துறைகள் முதல் தமிழகத்தின் தொழிலாளர் நலம்—கல்வி—தொழில் பொருளாதாரத் துறைகள் வரையில் கேள்விகள் இருந்தன.

முன்பே செய்ததுபோல், வெளி உறவு, பாதுகாப்பு ஆகிய துறைகள் பற்றி அண்ணா அவர்கள் விவாதிக்க விரும்பவில்லை; 'இவை, அரசியல் சட்டப்படி மத்திய அரசாங்கத்தின் பொறுப்புக்கள்' என்று அவர் மாணவர்களுக்குத் தெரிவித்து, இதுபோன்ற துறைகளில் இந்திய அரசாங்கத்தின் கொள்கைகளைத் தாம் 'பொதுவாக' ஒப்புக்கொள்வதாகக் குறிப்பிட்டார்.

அமைதிப் படையினர்

தமிழகத்தில் அமெரிக்க அமைதிப படையினர் ஆற்றும் பணியின் பயன்பற்றிக் கேட்டபோது மாநிலத்தின் வேளாண்மை முன்னேற்றத்திற்கு அவர்கள் ஆற்றியுள்ள 'பெரும்' உதவிகளை அண்ணா பாராட்டினார்.

புதன்கிழமை மாலை டிமோத்தி டுவைட் கல்லூரி முதல்வர் தாமஸ் கோடார்டு பர்கின, அவரது பனைவி இருவரும் தமது இல்லத்தில் தமிழக முதல் அமைச்சருக்கு ஒரு வரவேற்பு விருந்து நடத்தினர். வந்திருந்தவர்களில் பேராசிரியர்கள் லாயிடு ரேனல்டீஸ், குஸ்டேவ் ரானிஸ் இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள்; இவர்கள் இருவரும் யேல் பொருளியல் அறிஞர்கள்; யேலின் பொருளாதார வளர்ச்சி நிலையத்தை உருவாக்கி நடத்துவதில் இருவரும் முக்கிய பங்காற்றியுள்ளனர்; வளர்ந்துவரும் நாடுகள் முன்புள்ள பிரச்சினைகள், வாய்ப்புகள் பற்றிய விவரங்களைத தொகுப்பதும், ஆராய்வதும இந்நிலையத்தின் தனிப் பெரும் பணியாகும்.

நிலையத்தின் கவனத்தில் பெரிதும் இடம் பெற்றுள்ள நாடுகளில் ஒன்று இந்தியா என்பது குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் ரேனல்ட்ஸ் இந்த நிலையத்தை நிறுவியவர்.

அண்ணாவுடன் உரையாடலில் மெய்ம்மறந்த மாணவர்கள்

தமிழகத்து நிலையறிந்துகொள்ளக் காட்டிய பேரார்வம்

புகழ்பெற்ற தலைவர்கள் வரிசையில் அண்ணா பெற்ற இடம்

நியூஹேவன், ஏப். 27—

யேல் பல்கலைக் கழகத்தின் சிறப்பு விருந்தாளியாகத் தங்கியிருந்த தமிழக முதல் அமைச்சர் அண்ணா அவர்கள், மூன்றாவது நாளான புதன்கிழமையன்று முற்பகலில் ஜான் மக்கேடு என்னும் மாணவரின் துணையுடன் பல்கலைக் கழகத்தைச் சுற்றி உலவினார்.

அம்மாணவர், பால்ட்டிமோர் நகரைச் சேர்ந்தவர்; புகு நிலை வகுப்பில் படிப்பவர்; வருங்காலத்தில் மருத்துவ ஆராய்ச்சித் துறையில் பணியாற்ற விரும்புபவர்.

பெல்ப்ஸ் வாயிலில் அண்ணா அவர்களை அம்மாணவர் எதிர்கொண்டு வரவேற்றார்; இதன் வழியாகத்தான், யேல் கல்லூரி ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த இடத்திற்குப் போகவேண்டும்; இப்போது அது ஒரு புல் சதுக்கமாக விளங்குகிறது.

மாணவர்கள் தங்குமிடம்—நூலகம்—படிப்பு அறைகள் முதலியன அந்நாளில் இருந்த இடங்களையெல்லாம் அண்ணாவுக்கு மாணவர் காட்டினார்.

புகழ் பெற்ற அறிஞர்களான நோவா வெப்ஸ்டர் (ஆங்கில அகராதி ஆசிரியர்), அமெரிக்கப் புரட்சியின்போது உயிர் துறந்த இளம் நாட்டுப்பற்றாளர் நாதான் ஹேல் முதலியோர் பழைய கல்லூரியில்தான் படித்தனர்.

அவர்கள் உலவி வருகையில், இளந்தூற்றல் பெய்தது; பத்திரிகையாளர் ஒருவர், தமது மேலங்கியை அண்ணாவுக்கு இரவல் கொடுத்தார்; மற்றொருவர் ஒரு குடை கொடுத்தார்; அண்ணாவின் செயலாளர் திரு கே. சொக்கலிங்கம அன்புடன் அதனை வாங்கி, அண்ணா தலைக்குமேல் பிடித்தார்.

பிராட் போர்டு கல்லூரியின் பொது மன்றம், வகுப்பு அறைகள் ஆகியவற்றையும் அவர்கள் பார்வையிட்டனர். கல்லூரியின் முற்றமும் கட்டடங்களும், கலைச் சிறப்புக்குப் பேர் போனவை: ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தைப் போல் ஜெர்மானிய நாட்டுக் கூர் கோபுர வடிவமைப்பு உடையவை.

ஏறத்தாழ 60 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பெற்ற இக்கல்லூரி, யேல் பல்கலைக் கழகத்திலுள்ள 12 ஆராய்ச்சிப் படிப்புக் கல்லூரிகளில் ஒன்று.

முற்றத்துக்குப் போகும் ஒரு வழியில் மாபெரும் மணிக்கூண்டு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது; இது தனிச் சிறப்பு ஆகும்.

அண்ணா விருப்பத்தை நிறைவேற்றிய மாணவர்

கிளைன் ஆய்வுக்கூடத்தைப் பார்ப்பதற்கு அண்ணா அவர்கள் விருப்பம் தெரிவித்தார். யேல் பல்கலைக் கழகத்திலுள்ள உயரமான கட்டடங்களில் இது ஒன்று.

'நான் ஆராய்ச்சி நடத்தும் ஆய்வுக்கூடத்துக்கு உங்களை அழைத்துச் செல்கிறேன்' என்று கூறினார்—விருந்தோம்பும் பண்பு படைத்த மாணவர் மக்கேடு.

இந்த ஆய்வுக்கூடத்துக்குச் செல்வது நிகழ்ச்சி நிரலில் இடம் பெறவில்லையாதலால், அண்ணாவுக்கு என ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரும், ஓட்டுநரும் அங்கு காத்திருக்கவில்லை; எனவே, யேல் பல்கலைக் கழகம் தனது போலீசுக் கார்களில் ஒன்றை உடனே கொடுத்துதவியது. ஏறத்தாழ ஒரு மைல் தொலைவிலுள்ள கிளைன் ஆய்வுக்கூடத்துக்கு அவர்களையும், அவரது செயலாளரையும், துணை வந்த மாணவரையும் ஏற்றிக்கொண்டு விரைந்து பறந்தது—போலீசுக் கார்!

16 மாடிக் கட்டிடம்

பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பெற்றது—இந்த 16 மாடிக் கட்டடம்; இங்கு பலவகை விஞ்ஞானப் பிரிவுகளுக்கும் ஆய்வுக்கூடங்கள் உண்டு.

அண்ணா அவர்கள் பார்வையிட்டது—உயிரியல் இரசாயன ஆய்வுக்கூடம்; இங்குதான் இளைஞர் மக்கேடு, தமது ஆசிரியர் டாக்டர் தாமஸ் கிரைய்ட்டன் தலைமையில் ஆராய்ச்சி செய்கிறார். பேராசிரியரை, அண்ணாவுக்கு மாணவர் அறிமுகம் செய்து வைத்தார். பின்பு, பேராசிரியரே தமிழகத் தலைவரைப் பல்வேறு ஆய்வுக்கூடங்களுக்கும் அழைத்துச் சென்று காட்டினார்.

அவர்கள் இந்தக் கூடங்களைப் பார்வையிட்டு வருகையில் திரைப்படமெடுப்பவர்களும், புகைப்படமெடுப்பவர்களும் படமெடுத்தவண்ணமிருந்தனர்.

அடுத்து அண்ணா அவர்கள், யேல் பல்கலைக் கழக அலுவலகக் கட்டடத்துக்குச் சென்றார்; அங்கு பல்கலைக் கழக ஆளுநர்கள் அறையில் அமர்ந்து, பார்வையாளர் புத்தகத்தில் கையெழுத்திட்டார்.

யேல் பல்கலைக் கழகத்துக்கு வருகை தந்த புகழ்பெற்ற தலைவர்கள் எல்லாம் இதில் கையெழுத்திட்டுள்ளனர். (காலஞ்சென்ற) குடியரசுத் தலைவர் ஜான் எப். கென்னடி, திருமதி இந்திரா காந்தி [illegible] குறிப்பிடத்தக்கவர்கள். கென்னடி ஆட்சியின்போது திருமதி இந்திரா காந்தி யேல் வந்திருந்தார்.

கென்னடி மேசை

அண்ணா அமர்ந்திருந்து கையெழுத்திட்ட பெரிய மேசை, குடியரசுத் தலைவர் கென்னடி வெள்ளை மாளிகையில் அமைச்சரவையில் பயன் படுத்தியது போன்று தனிப்படத் தயாரிக்கப் பெற்றது.

மேசையைச் சுற்றிலும் 16 பேர் அமரலாம்; யேல் பல்கலைக் கழக ஆளுநர்கள் 16 பேர்தாம். அரசாங்கம் — கல்வி—சமயம்—கலைகள்—விஞ்ஞானம் முதலிய துறைகளின் பிரதிநிதிகள் இவர்கள்.

மேசை அருகிலுள்ள பெரிய நாற்காலிகள் ஒவ்வொன்றுக்கும் மாநில ஆளுநர்களின் பெயர்கள் சூட்டப்படுகின்றன. கல்வி ஆண்டில் மாதம் ஒருமுறை இவர்கள் இங்கு கூடி. பல்கலைக் கழக ஆட்சி பற்றி முடிவுகள் செய்கின்றனர்.

கனக்டிக்கட் மாநில ஆளுநர் (சனநாயகக் கட்சி) ஜான் டெம்ப்சி, தற்போது தமது பதவி காரணமாக பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினராக ஆளுநர் கூட்டங்களில் கலந்து கொள்கிறார்.

இந்தியாவில் தற்போது அமெரிக்கத் தூதராகப் பணியாற்றும் செஸ்ட்டர் போல்ஸ், முன்பு கனக்டிக்கட் ஆளுநராக இருக்கையில் இவ்வாறு சிறப்புச் செய்யப் பெற்றார்; இது குறித்து அவருக்குத் தனி மகிழ்ச்சி.

அன்பளிப்பு

அலுவலகக் கட்டடங்களை அண்ணா அவர்கள் பார்வையிடுகையில் அவருக்கு ஒரு புத்தகம் அன்பளிப்பாக வழங்கப் பெற்றது. யேல் பல்கலைக் கழகத்திலுள்ள பல்வேறு கல்லூரிகளின் வரலாறுகளும், மூத்திரைகளும் இலட்சிய வாசகங்களும் கொண்டது இந்தப் புத்தகம்!

தமிழகத்துக்கும் யேல் பல்கலைக் கழகத்துச்கும் நீண்ட நாட்களுச்கு முன்பே ஏற்பட்ட வரலாற்றுச் சிறப்புள்ள உறவுக்கு அடையாளமாக யெலிஹு யேல் பெருமகனின் உருவப் படம் மையமான ஓரிடத்தில் வைக்கப்பட்டுள்ளது. 1850-ல் இவரது பெயர் இந்தப் பல்கலைக் கழகத்துக்குச் சூட்டப்பெற்றது. அப்போது இந்தக் கல்விக்கூடம் பொருளில்லாமல் அல்லற்பட்டுக் கொண்டிருந்தபோது அவர், பெரும் நன்கொடை ஒன்று வழங்கினார். யேல் அந்நாளில் சென்னை மாநில ஆளுநராகப் பணியாற்றியவர்.

சென்னை நகரில் முன்பு இருந்த இந்த உருவப் படத்தைக் கண்டுபிடித்த, முன்னாள் அமெரிக்கத் தலைவர் ஐஸன்ஹாவர் டில்லி வந்தபோது அவருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது; அவர், 'இந்தப் படம், யேல் பல்கலைக் கழகத்தில் இருப்பதே பொருத்தம்' என்று கருதி, அதற்கு அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டார்.

விருப்பமறிந்து படைத்த விருந்து

புதன்கிழமை பிற்பகலில் டிமோத்தி டுவைட் கல்லூரியிலிருந்து அண்ணா அவர்கள், பில்லிமன் கல்லூரிக்கு நடந்து சென்று அங்குள்ள மாணவர்கள் குழு ஒன்றுடன் பகலுணவு உண்டார்.

பகல் விருந்து ஆடம்பரமற்ற ஒன்று; அண்ணா உட்பட விருந்தினர் ஒவ்வொருவரும் கையில் தட்டுகள் எடுத்துக்கொண்டு வரிசையில் நின்று, மேசைகளில் வைக்கப்பட்டிருந்த உணவுகளில் தமக்கு வேண்டியவற்றை எடுத்துக்கொண்டு சென்று, பொது மன்றத்தில் அமர்ந்து உண்டனர்.

கல்லூரிச் சமையலறையில் உணவு மேசைகள் வைக்கப் பெற்றிருந்தன. அண்ணா அவர்களை விருந்தாளியாக ஏற்றிருந்த மாணவர்கள், அவருக்கு என்னென்ன உணவு வகைகள் பிடிக்குமென முன்கூட்டியே அறிந்து, அவற்றையெல்லாம் சமைக்க ஏற்பாடு செய்திருந்தனர். எனவே, அண்ணாவுக்கு வேண்டிய அளவு மரக்கறி உணவுகளும் அங்கிருந்தன!

வயிற்றுக்குணவோடு செவிக்கும் விருந்து

விருந்தினர் வட்டத்தின் முகப்பில் ஒரு பெரிய சுழல் நாற்காலியில் அண்ணா அவர்கள் வசதியாக அமர்ந்திருந்து உரையாடிக்கொண்டே உணவுண்டார்.

விருந்துக்குப் பின்பு, கேள்வி—பதில் அரங்கம் நடந்தது. விருந்தாளியும், விருந்து கொடுத்தவர்களும் சுவைமிக்க இந்தக் கருத்துப் பரிமாற்றத்தில் நேரம் போவது தெரியாமல் நெடு நேரம் ஈடுபட்டிருந்துவிட்டனர்.

எனவே, அண்ணா அவர்கள், குறித்த நேரத்துக்கு $1\frac{1}{2}$ மணி காலந்தாழ்ந்து அடுத்த கருத்தரங்குக்குப் புறப்பட்டுச் சென்றார். இது, பல்கலைக் கழக வளை

(2-ம் பக்கம் பார்க்க)

ஏ. வி. பி. ஆசைத்தம்பி வெளிநாட்டுப் பயணம்

சென்னை--டில்லி விமான நிலையங்களில் சிறப்பான வழியனுப்பு

புதுடில்லி, ஏப். 26—

நேற்று காலை 11-45 மணிக்கு சென்னையிலிருந்து விமானம் மூலம் இங்கு வந்து சேர்ந்த தமிழகச் சட்டமன்ற தி. மு. க. உறுப்பினர் திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி, இன்று இங்கிருந்து பம்பாய் சென்று அங்கிருந்து ஏதன்சுக்குப் பயணமானார். விமான நிலையத்தில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் நண்பர்களும் வழியனுப்பி வைத்தனர்.

இலண்டனிலுள்ள காமன்வெல்த் நாடாளுமன்ற சங்கக் கிளையின் அழைப்பை ஏற்று, அச்சங்கம் நடத்தும் நாடாளுமன்ற நடைமுறைகள் பற்றிய பயிற்சி வகுப்பில் கலந்துகொள்வதற்காகத் திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் இலண்டனுக்குச் செல்வது தெரிந்ததே.

தோழர் ஆசைத்தம்பி அவர்கள், ஏதென்சிலிருந்து பாரிஸ் வழியாக இத்திங்கள் 30-ஆம் நாள இலண்டன் போய்ச் சேருவார்; இலண்டனில் மே 28-ஆம் நாள் வரை தங்கியிருந்து, இங்கிலாந்து நாட்டின் பல்வேறு இடங்களையும பார்வையிடுவார்.

சென்னையில் வழியனுப்பு

சென்னை விமான நிலயத்தில் தோழர் ஆசைத்தம்பி அவர்கட்குச் சிறப்பான வழியனுப்பு நடைபெற்றது.

25—4—68 காலை 9-மணிக்கு மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அமைச்சர்களும், கழக முன்னணித் தோழர்களும், ஆசைத்தம்பியின் குடும்பத்தினரும், நண்பர் வந்திருந்து வழியனுப்பிவைத்தனர்.

அமைச்சர்கள் மு. கருணநிதி, கே. ஏ. மதியழகன், சாதிக் பாட்சா, அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., நெல்லை மாவட்டச் செயலாளர் எம். எஸ். சிவசாமி எம்.எல்.ஏ., டி. கே. பொன்னுவேலு எம்.எல்.சி, சிட்டிபாபு எம.பி., முதலமைச்சர் அண்ணாவின் உதவியாளர் கஜேந்திரன், மற்றும் ஏராளமான தோழர்களும் மாலையணிவித்து வழியனுப்பினர்.

உசிலம்பட்டி மீனாட்சி ஆலை கதவடைப்பு

எதிர்த்து கழகத் தொழிற் சங்கம் நடவடிக்கை

மதுரை மாவட்டம் பொதுத் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் உசிலம்பட்டிக் கிளையைச் சார்ந்த கே. பி மீனாட்சி ரைஸ் அண்டு ஆயில் மில்லில் பணியாற்றும் தொழிலாளர் கூட்டம் 7—2—68-ல் நடைபெற்றது; அதுபோது தொழிலாளர்களில் சிலருக்கு மாதச் சம்பளம் போடவில்லையாதலால் அவர்களுக்கும் மாதச் சம்பளம் போடவேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டது.

தொழிலாளருக்குத் தரவேண்டிய விடுமுறைச் சம்பளம் 1964—65-66—67—68 ம் ஆகிய ஆண்டுகளுக்கு இதுவரையில் தரப்படவில்லை; எனவே, விடுமுறைச் சம்பளம் கேட்டு நோட்டீசு அனுப்பப்பட்டது.

மேலும், தொழிலாளர்கள் இதுவரையில், 20 ஆண்டுகள் தினமும் இரண்டு மணி நேரம் 'ஓவர்டைம்' வேலை செய்துவந்தும், அதற்குரிய ஊதியம் தரப்படாததால், 'ஓவர்டைம்' செய்ததற்கான ஊதியம் கேட்டு நிர்வாகத்திற்கு நோட்டீசு அனுப்பப்பட்டது; ஆனால் நிர்வாகம், மேற்கண்ட கோரிக்கைகளையெல்லாம் மறுத்துவிட்டதுடன், 14—4—68 முதல் சட்டவிரோதமாகக் கதவடைப்பும் செய்திருக்கிறது; இது பற்றி மதுரை மாவட்ட பொதுத் தொழிலாளர் சங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

காங்கிரசு ஏட்டின் கயிறு திரிப்பு

கழகச்செயலாளர் மறுப்பு

"19—4—68 அன்று நள்ளிரவில் காசிமேடு பகுதியில் தி. மு. க. தோழர்கள் காங்கிரசுக்காரர்களைத் தாக்கியதாகவும், கத்தியால் வெட்டியதாகவும் காங்கிரசு நாளேடு ஒன்றில் கயிறு திரிக்கப்பட்டுள்ளது.

"இதுபற்றிப் பரவலாக விசாரித்ததில், கழகத் தோழர்களுக்கும்—மேற்படி சண்டைக்கும் எந்த விதசம்பந்தமும் கிடையாது என்று அந்தப் பகுதியில் வாழும் பொது மக்கள் சொல்லுகிறார்கள்.

"மேலும், 21—4—68-ம் நாள், அதே இதழின் 3-ம் பக்கத்தில் வந்த செய்தியில், குறிப்பிட்ட நபர்கள் கழகத் தோழர்கள் அல்லர் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று சென்னை 2-வது வட்ட தி. மு. க. செயலாளர் சே. அரசு அறிவிக்கிறார்.

இராம. அரங்கண்ணல் சிங்கப்பூர் புறப்பாடு

திடீர் பயணம் குறித்து விளக்கம்

சென்னை, ஏப் 26—

கழகச் சட்டமன்ற உறுப்பினர் தோழர் இராம. அரங்கண்ணல் இன்று சிங்கப்பூருக்குப் பயணமானார். அவர்தம் திடீர்ப் பயணம் குறித்துப் பின்வருமாறு அறிவித்துள்ளார் :—

"சிங்கப்பூர் நண்பர்கள் கழக அழைப்பை ஏற்று இன்று நண்பகல் 1-மணிக்கு நான் புறப்பட்டுவிட்டேன். அங்கு தமிழ்க் கலாச்சாரம் உள்ளிட்ட சொற்பொழிவுகளுக்காக மலேசியா, சிங்கப்பூர் ஆகிய பகுதிகளுக்கு அழைக்கப்பட்டிருக்கிறேன்.

"கடைசி நிமிடம் வரையில் என்னுடைய பயணம் உறுதியில்லாதிருந்த காரணத்தினால், நான் மரியாதையும் அன்பும் வைத்துள்ள நண்பர்கள் — கழகச் சகோதரர்கள் — தலைவர்கள்—தொகுதி நலன் விரும்புவோர் எவரிடமும் நேரில் வந்து விடைபெற்றுச் செல்ல இயலாதவனாகி விட்டேன் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்வதோடு, எல்லோருடைய மன்னிப்பையும் வேண்டுகிறேன்."

தொழில் முதலீட்டு நிறுவனம்

புதிய தலைவர் நியமனம்

சென்னை, ஏப். 28—

சென்னை தொழில் முதலீட்டு நிறுவனத்தின் (கார்ப்பரேஷன்) தலைவராக டாக்டர் ஏ. இராமசாமி (முதலியார்) அவர்களை தமிழக அரசு நியமித்திருக்கிறது.

சென்னை 91-வது வட்டம்

பூம்புகார் பகுத்தறிவு மன்றம்

10—4—68-ல் சென்னை 91-வது வட்ட தி. மு. க. செயலாளர் திரு. செ. மோகனப்பா அவர்களை ஆணையாளராகக்கொண்டு மன்ற நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

அவைத்தலைவர் : மு. இராமன்; செயலாளர் : கோ. முனுசாமி; துணைச்செயலாளர் : பொன்முடி; பொருளாளர் : எஸ். ஜி தேவதாசு மற்றும் ஏழு செயற்குழு உறுப்பினர்கள்.

மே நாள் விழா

அனைத்துக் கட்சிக் குழு எடுத்துள்ள முடிவுக்கேற்ப, தமிழகத்தின் எல்லா இடங்களிலும் நடைபெறவிருக்கும் மே நாள் விழாக் கூட்டங்களில், கழகச் சார்பில் கீழ்க் காணும் ஊர்களில்—கீழ்க்காணும் சொற்பொழிவாளர்கள் கலந்துகொள்கிறார்கள்.

அந்தந்த ஊர்க் கிளைக் கழகச் செயலாளர்கள், குறிப் பிடப்பட்டுள்ள சொற்பொழிவாளருடன் உடன் தொடர்பு கொண்டு, அவரவர்க்கான வழிச்செலவு மற்றும் வசதி களைச் செய்துதருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பிற ஊர் விவரங்கள் அடுத்து வெளியிடப்படும்.

சென்னை	....	அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் என். வி. நடராசன் எம்.எல்.சி.
திருச்சி	....	அமைச்சர் மு. கருணாநிதி
கோவை	....	அமைச்சர் கே. ஏ. மதியழகன் காட்டூர் கோபால்
தஞ்சை	....	அமைச்சர் ஏ. கோவிந்தசாமி
உடுமலை	....	அமைச்சர் சே. மாதவன் அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா
நெய்வேலி	...	அமைச்சர் மா. முத்துசாமி எஸ். இராமச்சந்திரன் எம்.எல்.ஏ.
சேலம்	...	ப. உ. சண்முகம் எம்.எல்.சி.
தருமபுரி	...	க. அறிவழகன் எம்.எல்.சி.
சிவகங்கை	...	முரசொலி மாறன் எம்.பி.
தூத்துக்குடி	...	இரணியல் ரவி பி.எஸ்சி.,பி.எல்.
மதுரை	...	சி. பி. சிற்றரசு எம்.எல்.சி.
காஞ்சிபுரம்	....	வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ.
வேலூர்	...	என். வி. என். சோமு பி.ஏ.பி.எல்.
திண்டுக்கல்	...	எஸ். இராகவானந்தம் எம்.எல்.சி.
நெல்லை	...	ஏ. பி. சனார்த்தனம் எம்.எல்.சி.
நாகர்கோவில்	...	இரத்தினவேல் பாண்டியன்
கோவில்பட்டி	...	பி. எஸ். மணியம் எம்.எல்.ஏ.
மேட்டூர்	...	அறிவுடைநம்பி
நெல்லிக்குப்பம்	...	காஞ்சி கல்யாணசுந்தரம்
கரூர்	...	திருப்பூர் துரைசாமி எம்.எல்.ஏ.
ஆப்பக்கூடல்	...	ஏ. எம். இராசா எம்.எல்.ஏ.
காரைக்குடி	...	கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ.
குடியேற்றம்	...	புலவா கோவிந்தன் எம்.எல்.ஏ.
ஈரோடு	...	கோவை மு. இராமநாதன்
அரக்கோணம்	...	ம. வே. நாராயணசாமி
அம்பத்தூர்	...	வேலூர் நாராயணன்
மாதவரம்	...	கணபதி பி.எஸ்சி., பி.எல்.
திருவொற்றியூர்	...	கே. டி. எஸ். மணி அ. பொ. அரசு எம்.எல்.ஏ.
சென்னிமலை	...	அரங்கநாயகம் பி.ஏ.பி.எல்.
குடந்தை	....	கோ. சி. மணி எம்.எல்.சி.
மன்னார்குடி	...	தமிழரசி பி.ஏ.
திருவில்லிபுத்தூர்	...	பழனியம்மாள் எம்.எல்.ஏ.
பொள்ளாச்சி	...	கம்பம் இராசாங்கம் எம்.எல்.ஏ.
சிவகாசி	...	உ. பில்லப்பன் எம்.ஏ.
திருப்பூர்	...	இளமுருகு
விருத்தாசலம்	...	எம். எஸ். வெங்கடாசலம்
இராணிப்பேட்டை	...	டி. கே. பொன்னுவேலு எம்.எல்.சி.
பேட்டைவாய்த்தலை	...	நன்னிலம் நடராசன்
சங்கரன்கோவில்	...	அக்கினிராசு எம்.எல்.ஏ.
கடலூர்	...	கே. ஏ. கிருஷ்ணசாமி எம்.ஏ.பி.எல்.
மேட்டுப்பாளையம்	...	க. அன்பரசு
குன்னூர்	...	எஸ். ஏ. இராசமாணிக்கம்
சீர்காழி	...	பொன். சொக்கலிங்கம்
சிதம்பரம்	...	இரே. இளம்வழுதி எம்.எல்.ஏ.
தாம்பரம்	...	பொற்செல்வி இளமுருகு
சிங்காநல்லூர்	...	கூடலரசன்
வால்பாறை	...	பி. எஸ். சானகிராமன் எம்.சி. வழக்கறிஞர் சுப்பையா

மேற்காணும் ஊர்களில் குறிப்பிட்டுள்ள சொற்பொழிவாளர் களுடன் ஆங்காங்கு அந்தந்தத் தொகுதியைச் சார்ந்த கழக பாராளுமன்ற—சட்டமன்ற—உள்ளாட்சிமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு கூட்டங்களைச் சிறப்பு செய்யுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

28--4--68

திருச்சி

அறிஞர்—கலைஞர் படிப்பகச் சார்பில் மாலை 6-மணிக்கு காசாப் பேட்டை அண்ணா திடலில்; தலைவர்: கு. கரிகாலன்; பேசுவோர்: கோவை மு. இராமநாதன். எம். எஸ். மணி எம்.எல்.ஏ., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., அ. நடராசன், எஸ். ஏ. ஜி. ராபி, மற்றும் பலர்.

எம். பன்னீர்செல்வம்

தொகுதிச் சுற்றுப்பயணம்

"ஏப் 29, 30 ஆகிய நாட்களில் ஆம்பூர்த் தொகுதியைச் சேர்ந்த ஊர்களில் கீழ்க்கண்டவாறு சுற்றுப்பயணம் செய்கிறேன்; பொதுமக்கள் தங்கள் கோரிக்கை மனுக்களைத் தந்து, என் சுற்றுப்பயணத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்; சுற்றுப்பயணத்தில் வேலூர் வட்ட தி.மு.க. அவைத் தலைவர் கு. ஆனந்தமும் கலந்து கொள்ளுகிறார்"

என்று, எம். பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. அறிவிக்கிறார்.

29—4—68 :

கருங்காலி, முகம்மதுபுரம், ஓங்சப்பாடி, வரதலம்பட்டு, கீழ்கொத்தூர், பின்னத்துரை, மடயாப்பட்டு, வண்ணாந்தாங்கல், மேல் அரசம்பட்டு, சேர்ப்பாடி, நேமந்தபுரம், அத்திகுப்பம்.

30—4—68 :

ஜார்தாங்கொல்லை, பாலாம்பட்டு, பீஞ்சமந்தை.

பாரதி தாசன்

பிறந்த நாள் விழா

நாமக்கல் பாவேந்தர் பாரதிதாசன் மன்றத்தின் சார்பில், 28—4-68 அன்று பாரதிதாசன் பிறந்த நாள் விழாக் கொண்டாடப் பெறும்.

நாமக்கல் கணேசபுரம் திராவிடர் கழகக் கட்டிடத்தில் காலை 9-மணிக்கு நிகழ்ச்சிகள் தொடங்கும்.

மன்றத் தலைவர் திரு. ப. சுப்பராயன் தலைமைவகிப்பார்; திரு. மு. செல்லப்பனார் விழாவைத் தொடக்கிவைப்பார்; சலகை ப. கண்ணன் அவர்கள், பாரதிதாசன் படத்தைத் திறந்து வைப்பார்; கவிஞர் சுரதா, திரு. கு. பொன்னுசாமி எம்.ஏ.,பி.எல். ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

மாலை 4-மணிக்கு கவிஞர் சுரதா தலைமையில் நடைபெறும் பட்டிமன்றத்தில் திருவாளர்கள் முருகுசுந்தரம் எம்.ஏ., கோ. கணேசன் எம்.ஏ, எம்.எல்.பி, க. சுப்பிரமணியன் பி.எஸ்சி.,பி.டி., புலவர் பி. அண்ணாமலை, அப்துல் கபார், கோ. விசயராசன் ஆகியோர் பங்கேற்கிறார்கள்; வரவேற்புரை: நா. செம்பு.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழக அறிக்கை : 3/68

நகர--பெருநகரங்களின்

விவரம்

(அ) கழகச் சட்ட திட்டம் விதி 7—பிரிவு 4-ன்படி, உட்கிளைகளின்றி நகரக் கிளை அமையவேண்டிய நகரங்களாகத் தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்படும் நகரங்கள் :—

1. ஆலந்தூர்
2. திருவொற்றியூர்
3. திருவள்ளூர்
4. அரக்கோணம்
5. ஆற்காடு
6. ஆம்பூர்
7. ஆரணி
8. இராணிப்பேட்டை
9. திருப்பத்தூர்
10. வாலாஜா
11. நெல்லிக்குப்பம்
12. பண்ருட்டி
13. திண்டிவனம்
14. தருமபுரி
15. கிருஷ்ணகிரி
16. ஆத்தூர்
17. இடைப்பாடி
18. இராசிபுரம்
19. திருச்செங்கோடு
20. தாராபுரம்
21. கோபிசெட்டிப்பாளையம்
22. மேட்டுப்பாளையம்
23. உடுமலைப்பேட்டை
24. குன்னூர்
25. கம்பம்
26. பழனி
27. பெரியகுளம்
28. தேனி
29. மணப்பாறை
30. பட்டுக்கோட்டை
31. திருவாரூர்
32. மன்னார்குடி
33. தேவகோட்டை
34. பரமக்குடி
35. இராமநாதபுரம்
36. சிவகாசி
37. சிவகங்கை
38. மேலப்பாளையம்
39. கோவில்பட்டி
40. புளியங்குடி
41. சங்கரன்கோவில்
42. செங்கோட்டை
43. தென்காசி
44. குளச்சல்
45. குழித்துறை
46. பத்மனாபபுரம்

(ஆ) கழகச் சட்ட திட்டம் விதி 7 – பிரிவு 5-ன்படி உட்கிளை அமைத்தும், விதி 7—பிரிவு 9, 10, 11 ஆகியவைகளின்படி தேர்தல் நடத்தவும் தகுதியுள்ளவைகளாகத் தலைமைக் கழகம் அறிவிக்கும் பெருநகரங்களின் விவரம் : —

1. காஞ்சிபுரம்
2. செங்கற்பட்டு
3. தாம்[illegible]ம்
4. கு[illegible]பற்றம்
5. [illegible]ண்ணுமலை
6. [illegible]வலூர்
7. வாணியம்பாடி
8. கடலூர்
9. சிதம்பரம்
10. விழுப்புரம்
11. சேலம்
12. கோயமுத்தூர்
13. ஈரோடு
14. பொள்ளாச்சி
15. சிங்காநல்லூர்
16. திருப்பூர்
17. உதகமண்டலம்
18. போடிநாயக்கனூர்
19. மதுரை
20. திண்டுக்கல்
21. கரூர்
22. புதுக்கோட்டை
23. திருவரங்கம்
24. திருச்சி
25. தஞ்சாவூர்
26. குடந்தை
27. மாயூரம்
28. அருப்புக்கோட்டை
29. காரைக்குடி
30. இராசபாளையம்
31. திருவில்லிபுத்தூர்
32. விருதுநகர்
33. கடையநல்லூர்
34. பாளையங்கோட்டை
35. திருநெல்வேலி
36. தூத்துக்குடி
37. நாகர்கோவில்
38. நாகப்பட்டினம்

(இ) கழகச் சட்ட திட்டம் விதி 9—பிரிவு 10-ன்படி வட்டக் கழகத்திற்கு உரிய தகுதியைப் பெறும் பெருநகரக் கிளை அமையும் தகுதி பெற்றவையாகத் தலைமைக் கழகம் அறிவிக்கும் பெருநகரங்களின் விவரம் :—

1. காஞ்சிபுரம்
2. வேலூர்
3. சேலம்
4. கோவை
5. சிங்காநல்லூர்
6. மதுரை
7. திண்டுக்கல்
8. திருச்சி
9. குடந்தை
10. தஞ்சாவூர்
11. திருநெல்வேலி
12. தூத்துக்குடி
13. நாகர்கோவில்

'அறிவகம்', சென்னை-13
25—4—68 } ---தலைமைக் கழகம் (தி.மு.க.)

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறது! அவருடைய கருத்துக்களுக்கு இருக்கும் தார்மீக ஆதரவு, இந்தியாவின் மத்திய அரசுக்குப் பலத்த அடியாக விழும்போதுதான் அவர்கள் விழித்துக்கொள்ளப் போகிறார்கள்!

"இவர்கள் நம்மை யாரென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்?"

என்று இரண்டாம் உலகப் பெரும் போரின் போது வின்ஸ்டன் சர்ச்சில் கேட்டாராம்!

பிற இனங்களை அழிப்பதையே தன் உயிர் மூச்சாய்க் கொண்டு வெறியோடு போர் செய்த இட்லருக்கு, பிரிட்டன் நாட்டு மக்கள் சிம்மசொப்பனமாக இருந்தார்கள்! அவன் நினைத்ததைவிட, பிரிட்டிஷ் மக்கள் உறுதியாக இருந்ததைக் கண்டு இட்லர் மனம் உடைந்து போனான்!

உலகம் மெச்சும் பேரறிஞர் அண்ணா அவர்களை முதல்வராகக் கொண்ட தமிழக மக்கள், எவ்வளவு உறுதியாக இருக்கிறார்கள் என்பதைக் கண்டும், மத்திய அரசின் இந்தி வெறியர்களுக்குப் புத்தி வரவில்லையென்றால்.........

வரலாறு பதில் சொல்லி விட்டுப் போகட்டும்!"

அப்படிக் கூறவில்லையாம் --- ஆந்திர அமைச்சரின் விளக்கம்

"'அரிசனங்களை நன்றாக உதையுங்கள்' என்று நான் கூறவேயில்லை; பத்திரிகையில் வந்த செய்தி ஆதாரமற்றது--தவறானது"

என்று ஆந்திர விவசாயத்துறை அமைச்சர் திம்மா ரெட்டி மறுத்துக் கூறியுள்ளார்.

"இந்த மறுப்பை, மத்திய உள்துறை அமைச்சருக்கு 24-ந் தேதியன்றே அனுப்பிவிட்டேன்" என்றும் அவர் கூறியுள்ளார்.

இது பற்றி மக்களவையில் கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டது தெரிந்ததே.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.